Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 11 வெள்ளிக்கிழமை (27-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:267

### பண்டாரவளை தடுப்பு முகாம் படுகொலைகள்

# கொலையுண்டவர்களின் சடலங்களை உறவினரிடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடு!

கொழும்பு,ஒக்ரோபர்27

**பண்டாரவ்வளை தடுப்பு முகாமில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளது.**

**இவர்களில் 13 பேர்களின் சடலங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டன.**

**அவை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். அடையாளம் காணப்பட்ட சடலங்களில் இரண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கைதிகள் உடையவை.**

உயிரிழந்தவர்களின் சடலங்களில் 18 சடலங்கள் நேற்று பண்டாரவளை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தன. இவற்றிலேயே 13 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. ஏனைய சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு கருகிய நிலையிலும் அடிகாயங்களினால் உருக்குலைந்த நிலையிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய சடலங்களில் தியத்தலாவை வைத்தியசாலையில் 5 சடலங்களும், கொழும்பு வைத்தியசாலையில் 1 சடலமும், பதுளை வைத்தியசாலையில் 2 சடலங்களும் வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த 7 பேர் தொடர்ந்தும் தியத்தலாவையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். நால்வர் பதுளையிலும், மூவர் கொழும்பிலும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காணப்பட்டோர் விவரம்

கொழும்பு,ஒக்.27

பண்டாரவளை விந்துணுவெவப் புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் சடலங்களில் 13 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட சடலங்களுக்குரியவர்களின் விவரம் வருமாறு:-

★ குணபாலன் ஜெயவர்த்தனம் (மன்னார்)

★ அந்தோனி ஜோன் (கல்லடி, மட்டக்களப்பு)

★ இராமசாமி கருணாகரன் (வவுனியா, சாந்தசோலை )

★ விசுகரன் குபேஸ்குமார் (வேப்பங்குளம், வவுனியா)

★ விநாயகமூர்த்தி செந்தூரன் (வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

(10ஆம் பக்கம் பார்க்க)

## கைதான 200 கிராமவாசிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்!

### ஜோசப் எம்.பி. கண்டனம்

கொழும்பு,ஒக்.27

பண்டாரவளை விந்துணுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பண்டாரவளைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 200 கிராமவாசிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி சுமார் மூவாயிரம் பேர் பண்டாரவளை பொலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு நடத்திய ஆர்ப்பாட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## பலர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர் சடலங்கள் உருக்குலைந்த நிலையில்

### நகரசபை பிரதித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.27

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்டவர்களில் பலர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை நகர சபையின் பிரதித் தலைவர் ரகுபதி நடராஜா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

உயிரிழந்தவர்கள் இனம் காண முடியாத அளவுக்கு சடலங்கள் எரிந்து கருகி உருக்குலைந்துள்ளன.

காயமடைந்தவர்கள் கூட மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது சிலர் தப்பியோடிவிட்டதாக கூறப்படுவதால் அவர்கள் திரும்பிவந்த பின்பே உயிரிழந்தவர்களை அடையாளம் காணமுடியும்.

இந்தத் தாக்குதலுக்கு பலத்த பின்னணி இருப்பதாக நான் கருதுகின்றேன். இச்சம்பவத்துக்கு முன்னர் பண்டாரவளை நகரில் இனவாதத்தை தூண்டும் வகையிலான சுவரொட்டிகள் செவ்வாய்க்கிழமை இரவு ஒட்டப்பட்டிருந்தன.

இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட பின்னரே இந்தப் படுகொலைகள் நடைபெற்றுள்ளதால் இது குறித்து சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ)

## ஜெயலத் கலந்துகொள்ளவிருந்த கூட்டத்தில் துப்பாக்கிச் சூடு!

### ஆதரவாளர் ஒருவர் காயமுற்றார்

கொழும்பு,ஒக்.27

கம்பஹா மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவுக்கு அளிக்கப்படவிருந்த வரவேற்புக் கூட்டத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்று மாலை நீர்கொழும்பில் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனாவுக்கு வரவேற்பு அளிப்பதற்கு கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவர் காயமடைந்தார்.

டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா கூட்டத்துக்குச் செல்ல முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அவருக்கு இந்தச் சம்பவம் குறித்து அறிவிக்கப்பட்டதும் அவர் அங்கு விரைந்து சென்று காயம் அடைந்தவரை கூட்டிவந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்தார்.(இ)

## நாளை நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.27

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து யாழ்.நகரில் நாளை நடத்தப்பட இருந்த ஆர்ப்பாட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

நிமலராஜனின் கொலையைக் கண்டித்து நாளை சனிக்கிழமை யாழ்.பஸ் நிலையம் முன்பாக பத்திரிகையாளர்கள், மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், பொது மக்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வணிக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன.

எனினும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஆர்ப்பாட்டத்தை இன்னொரு நாளைக்கு ஒத்திப்போட நேர்ந்துள்ளதாகவும் அது நடைபெறவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்க வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ)

## கைதிகள் படுகொலையை கண்டித்து நாளை துக்கம் அனுஷ்டிக்கப்படும்

### ஈ.பி.டி.பி. அமைப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.27

பண்டாரவளை, விந்துணுவெவப் பகுதியில் அமைந்துள்ள புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் பொருட்டு நாளை சனிக்கிழமை குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்குமாறு ஈ.பி.டி.பி.அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனவாதிகளின் கொலைக்கரங்கள் மீண்டும் எமது குரல்வளையை நசித்து குருதி குடித்துள்ளன. அன்று வெலிக்கடைச் சிறையில் இன்று விநதுணுவெவவில். 25க்கு மேற்பட்டோர் குண்டர்களினால் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் இப் பேரினவாதிகளின் மூர்க்கத்தனமான இச்செயலை ஈ.பி.டி.பியினராகிய நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு நாளை சனிக்கிழமை யாழ்.குடாநாடு முழுவதும் "துக்க தினம்" அனுஷ்டிக்குமாறு அனைத்து மக்களையும், பொதுஸ்தாபனங்களையும், வர்த்தக ஸ்தாபனங்களையும், அரச, தனியார் நிறுவனங்களையும் கேட்டுக்கொள்கிறோம். இவர்கள் தங்களுடைய ஸ்தாபனங்களை மூடியும் போக்குவரத்துச் சங்கங்கள் தங்கள் போக்குவரத்துச் சேவையினை இடைநிறுத்தியும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் -

பேரினவாதிகளினால் நடத்தப்பட்டுள்ள இக்கோரச் சம்பவத்தினை வெளி உலகிற்கு எடுத்துக்காட்டும்படியும் கோருகிறோம்.

இந்த நாட்டின் எப்பாகத்திலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் எமது சக்தியை வெளிக்காட்டவும் இத் துக்க தினத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்குமாறும் பணிவுடன் வேண்டுகின்றோம்- என்றுள்ளது.

(இ)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை என்றும் வழங்கக் கடமைப்பட்டுள்ளது. அந்தக் கடமைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில்-

சகோதரப் பத்திரிகையாளர் நிமலராஜனின் ஆற்றல் மிக்க துணிச்சலான சமூகப் பணிக்கு நன்றிகூறும் வகையில் -

நமது சமூகத்தின் சார்பில் உதவி நிதி ஒன்றைத் திரட்டி அவரது குடும்பத்துக்கு வழங்கும் முயற்சியை 'உதயன்' ஆரம்பித்துள்ளான்.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 31ஆம் நாள் நினைவலைகள்

உதயம் 04 - 01 - 1939



அஸ்தமனம் 27 - 09 - 2000

## திருமதி இரத்தினம் திருச்செல்வம்

அம்மா!
மகளின் மணக்கோலம் காண
மனை பிரிந்து சென்றவரே
மணக்கோலம் காணுமுன்னே - உங்கள்
பிணக்கோலம் காணவைத்து
பிரிந்து சென்ற மாயமென்ன?

உங்கள் வரவைக் காண
வழிமேல் விழி வைத்தோம்
வந்தது நீங்களல்ல
உங்கள் மரணச் செய்தி.

விதியின் வழியினிலே நீங்கள்
விண்ணகத்தில் சேர்ந்துவிட்டீர்
உங்கள் கனிமுகம் காணாது
கலங்கித் தவிக்கின்றோம்.

கடந்த 27.09.2000 அன்று ஹற்றனில் காலமான எமது அன்புத் தாயாரின் துயரச் செய்திகேட்டு ஓடோடி வந்து எங்கள் துன்பத்தில் பங்குகொண்டு பல வழிகளிலும் உதவிய உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

கணவர்,
மகன்மார்: சுரேஸ், ரமேஸ்,
மகள்: சுமதி.

*உரும்பிராய் கிழக்கு.* (79891)

## லொறி - சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம்,ஒக்.27

கோண்டாவில் ஸ்ரேசன் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் சைக்கிள் ஓட்டி வந்தவர் காயமடைந்தார்.

விடத்தற்பளையில் இருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது இருபாலை கிழக்கில் வசிக்கும் இராசா சிவபாதசுந்தரம் (வயது 50)என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் தற்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-ரி)

## மட்டக்களப்பில் மினிபஸ் வேலைநிறுத்தம்

மட்டக்களப்பு நகரில் உள்ள மினிபஸ் சேவையாளர்கள் கடந்த புதனன்று இரண்டு மணிநேரம் திடீர் வேலைநிறுத்தம் ஒன்றில் குதித்தனர்.

மினிபஸ் நடத்துனர் ஒருவர் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.(இ-7-21)

நாகம்ஸ் சுன்னாகம்
கார்த்திக், கௌசல்யா,
ஹீரா, அப்பாஸ் நடித்த
பூவேலி
(ரீல்ஸ்)
காட்சிகள்- 11.00, 2.30, (பு.நே)
(79917)

ராஜா
(யாழ்ப்பாணம்)
விஜய், ஜோதிகா,
விஜயகுமார் மற்றும்
பலரின் நடிப்பில்
குஷி
காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)
(C/13401)

# திருமறைக்கலாமன்றம்
யாழ்ப்பாணம்

## அஞ்சலி நிகழ்வு



ஈழத்தின் நவீன ஓவியத் துறையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியவரும், பல மாணவர்களை உருவாக்கியவரும், பண்பினாற் சிறந்த மனிதனாய், கலைஞனாய் வாழ்ந்து வரலாறாகிவிட்டவருமாகிய

### அமரர் ஓவியர் மாற்கு

அவர்களின் மறைவையொட்டிய அஞ்சலி நிகழ்வொன்றை நடத்தவிருப்பதால் அந்த நிகழ்விற் கலந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

* காலம் : நாளை (28.10.2000) சனிக்கிழமை, பி.ப. 3.30 மணி.
* இடம் : மன்ற கலைத்தூது மண்டபம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 2393.* (C/13591)

பொதுச் செயலாளர்
திருமறைக்கலாமன்றம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் பொன்னம்பலம் சுப்பிரமணியம்

பிறப்பு: 12.11.1932 இறப்பு: 27.09.2000

எங்கள் குடும்பத் தலைவர் அமரர் பொன்னம்பலம் சுப்பிரமணியம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு -

இன்று (27.10.2000) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

*கோப்பாய் மத்தி.* (C/13574)

# இலவசம் நெடுந்தீவில் இலவசம்

நெடுந்தீவு வாழ் மக்களின் சரீர, பண்பாட்டு, நிதியுதவியுடனும் கலாசார சபையின் அனுசரணையுடனும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் **செல்லையா மெற்றாஸ்மயிலின்** தயாரிப்பில் உருவான

## 'வேழம்படுத்த வீராங்கனை'



### ஆட்ட நாட்டுக் கூத்து

24ஆவது மேடையேறுகிறது.

இடம் :- நெடுந்தீவு மகாவித்தியாலயம்
காலம் :- 29.10.2000 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணி
தலைவர் : புலவர் ஏ.டபிள்யூ.அரியநாயகம் *(தலைவர், பிரதேசசபை நெடுந்தீவு)*
முதன்மை விருந்தினர்: அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் *(பேராயர் தென்னிந்தியத் திருச்சபை, யாழ்.ஆதீனம்)*

ஆசியுரை:

1. பிரம்ம ஸ்ரீ கா.புவனேந்திர சர்மா
2. வணபிதா லூயிஸ் மொன்பேட் அடிகளார்
3. போதகர் எஸ்.ஆனந்தராஜன்

சிறப்பு விருந்தினர்கள்:

1. திரு.நா.சங்கரப்பிள்ளை *(தலைவர், நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்)*
2. திரு.க.அரசரட்ணம் *(கோட்டக் கல்வி அதிகாரி, நெடுந்தீவு)*
3. திருமதி சா.கிருஷ்ணதாஸ் *(அதிபர், நெடுந்தீவு. ம.வி)*
4 திரு.சு.நடராஜலிங்கம் *(அதிபர், சைவப்பிரகாச வித்தியாசாலை)*
5. அருட் சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ *(அதிபர், நெடுந்தீவு. றோ.க.கல்லூரி)*
6. திரு.எஸ்.எட்வேட், *(சமாதான நீதிவான், நெடுந்தீவு)*

நன்றியுரை: திரு.இ.நித்தியானந்தன் *(கலாசார உத்தியோகத்தர்)*
ஒலி,ஒளி: திரு.எ.அருந்தவசீலன்
வீடியோப் படப்பிடிப்பு: ~ சேதுபதி ~ நிமலரத்தினம், நெடுந்தீவு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நெடுந்தீவு கலாசார சபை

*அன்பளிப்பு:*

நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

சுமங்கலி நகை மாளிகை

118A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(79888)

# 151ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 - 03 - 1943



மறைவு 21 - 05 - 2000

## அமரர் பொன்னன் செல்லக்கண்டு

அன்பின் உருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் உறை
விடமாய் எம்மைக் காத்த எம்மினிய அப்பாவே!
எண்ணத்தின் தலைவனாய் வாழ்ந்து
எம்மையும் வாழ வைத்தாய் அப்பாவே!
இன் சொல் பேசி எல்லோருக்கும் ஆறுதல்
சொல்லி திரிந்தாயே அப்பா! இன்று எம்மை எல்லாம்
தவிக்க விட்டு விட்டு எங்கு சென்றாயோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*தகவல்:-*
*குமார் (மகன்)*
*குட்டியப்புலம்,*
*வசாவிளான்.*

(79920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மூவரைப் பலி கொண்ட லொறி விபத்து

# சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.காங்கேசன்துறை வீதியில் கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற லொறி விபத்து விசாரணைகளை நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது. சந்தேக நபர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர். ரி.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில் சொக்கநாதன் முகுந்தன், இரத்தினம் சிறீதரன், முத்து கருணாநிதி மற்றும் கொனிக்கா படப்பிடிப்பாளர் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க நீதிமன்றுக்கு வந்த இருவரை வீட்டுக்குத் திருப்பி அனுப்ப முற்பட்டதாக சந்தேகிக்கப்படும் முகம்மது காசிம் என்பவர் நீதிமன்றின் முன் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

இவர் நீதிவானிடம் மன்னிப்புக் கேட்டதையடுத்து சாட்சிகளுடன் எவ்வித தலையீடும் செய்யக்கூடாது என்று மேற்படி நபரை கடுமையாக எச்சரிக்கை செய்த நீதிவான், இவரை 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதித்தார்.

தொடர் விசாரணைகளை ஒக்.27 ஆம் திகதிக்கு (இன்று) ஒத்திவைத்த நீதிவான் சந்தேக நபர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-5-ரி)

# சைவ நெறித்தேர்வு

யாழ்ப்பாணம்,ஒக்.27-

யாழ்.சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவ நெறித்தேர்வு அடுத்த மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு நேர அட்டவணை மற்றும் பரீட்சை தொடர்பான ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

ஆவணங்கள் கிடைக்கப்பெறாத- தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த- பாடசாலை அதிபர்கள் சைவபரிபாலன சபையின் பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு பரீட்சை தொடர்பான பணிகளை மேற்கொள்ளுமாறும் - மேற்படி சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி கேட்டுள்ளார். (இ-7)

# மாவிட்டபுரம் ஆலயம் செல்லும் பக்தர்களுக்கு விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.27

ஐப்பசி வெள்ளிக்கிழமைகளில் பக்தர்கள் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவை ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இவ்வாறு செல்ல விரும்பும் பக்தர்கள் வெள்ளிக்கிழமைகளில் காலை 10 மணிக்கு முன் தெல்லிப்பழை பாதுகாப்புப் பணியகத்தில் சமுகமளித்திருக்க வேண்டும் எனவும் -

அங்கு சமுகமளிப்போர் விசேட ஏற்பாடுகள் மூலம் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் பிற்பகல் 2மணிக்கு அழைத்து வரப்படுவர் எனவும் - ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (இ-7)

# புதிய ரக ஆயுதம் மூலமே ஹெலிகள் சுடப்பட்டுள்ளன

கொழும்பு,ஒக்.27

விமானங்களைச் சுட்டு வீழ்த்தக் கூடிய புதிய ரக ஆயுதம் ஒன்று தற்போது புலிகள் வசம் உள்ளது என்று விமானப்படை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இருவாரங்களில் அனர்த்தத்துக்குள்ளான இரண்டு ஹெலிகொப்டர்களும் இந்தப் புதிய ரக ஆயுதம் மூலமாகவே சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

நாகர் கோயில், திருகோணமலை ஆகிய பகுதிகளில் இரண்டு ஹெலிகொப்டர்களையும் சுட்டு வீழ்த்த ஒரே ரக ஆயுதமே பயன்படுத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளதாகவும் -

இந்தப் புதிய ரக ஆயுதத்தை இனம் காணும் பொருட்டு விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8-20)

### யாழ். பஸ் நிலையப் பகுதியில்

# மலசல கூட வசதி இன்றி பயணிகள் பெரும் அவதி

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் மலசல கூட வசதிகள் இல்லாததால் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நீண்ட தூரப் பிரயாணங்களை மேற்கொண்டு நகரப் பகுதிக்கு வரும் பொதுமக்கள் தமது இயற்கை உபாதைகளைத் தீர்ப்பதற்கு மலசல கூட வசதியின்றி அவஸ்தைப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பஸ்தரிப்பு நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்காக அங்கிருந்த மலசல கூடங்கள் இடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இதற்கு மாற்று வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பஸ்தரிப்பு நிலையத்திற்கு மாநகரசபையினர் கூட மாற்று மலசலகூட வசதிகளை பொதுமக்களின் பாவனைக்காக ஏற்படுத்திக் கொடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுள்ளது. (ஐ-ரி-5)

# பழிவாங்கும் நடவடிக்கை என்று ஜோசப் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஒக்.27

கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பழிவாங்கும் பொருட்டே பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் குற்றம்சாட்டியுள்ளார்.

1992 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8 ஆம் திகதி அராலியில் ஜெனரல் டென்ஸில் கொப்பேக்கடுவவும் மற்றும் படை அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டதற்கு பழி வாங்கும் ஒரு நடவடிக்கையாக அடுத்தநாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலந்தனைக் கிராமத்தில் 36 தமிழர்கள் கொல்லப்பட்டனர். தற்பொழுது பண்டாரவளையில் இடம் பெற்றுள்ள சம்பவமும் இத்தகைய ஒன்றே.

சிங்களப் பிரதேசம் ஒன்றில் மேற்படி புனரமைப்பு முகாம் அமைக்கப்பட்டிருந்ததே இந்த அனர்த்தத்துக்கு மூலகாரணம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

களுத்துறைச் சிறைச்சாலையை தமிழர் பகுதியான மட்டக்களப்புக்கு மாற்றுமாறு அரசிடம் முன்னர் கோரிக்கை விடுக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார். (இ-8)

# துணிவுடன் செயலாற்றிய நடுநிலைமை தவறாத செய்தியாளன் நிமலராஜன்

## களுத்துறைக் கைதிகள் அறிக்கை

கொழும்பு,ஒக்.27

துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் யாழ். செய்திகளை உடனுக்குடன் நடுநிலை தவறாது உள்நாட்டு, வெளிநாட்டு தகவல் ஊடகங்களுக்கு வழங்கி வந்த உண்மைச் செய்தியாளன் சகோதரன் நிமலராஜன்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து அவர்கள் அனுப்பிய பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

19-10-2000 அன்று அராஜகவாதிகளின் அகோரத் தாண்டவத்துக்குப் பத்திரிகையாளர் நிமலராஜன் பலியான செய்தி கேட்டு நாம எல்லோரும் அதிர்ச்சியும், ஆறாத்துயருமடைந்தோம். அதேவேளை உண்மை மனிதநேயனின் உயிரிழப்பால் உருகி நிற்கும் உள்ளங்களினதும், அவரது குடும்பத்தினரதும் மீளாத்துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

இரக்கமற்றுத் தொடரும் இனவாத யுத்த இருட்டுக்குள் இரும்புக் கரங்களால் இரை கொள்ளப்பட்ட இன்னுயிர்கள் ஒன்றல்ல, இரண்டல்ல. இனத்தின் காப்பரண்களாக நின்று கொண்டு இருட்டில் நடக்கும் சம்பவங்களை இவ்வுலகுக்கு வெளிசசம் போட்டுக் காட்டிய கருவூலங்களை இழப்பது இதுதான் முதற்தடவையுமல்ல.

இனவாதத் தீவின் தலைநகரில் இறுமாப்போடு நின்ற மாமனிதர் குமாரை இரை கொண்டது. இன்று தயக்கமின்றி தமிழ் மண்ணில் நடக்கும் தப்புத் தாளங்களைத் துணிவோடு எடுத்தியம்பிய தன்மானத் தமிழனைத் தமக்கு இரையாக்கிக் கொண்டன இந்த விசஜந்துக்கள்.

இன்றுவரை தொடரும் நாகரிக நடைமுறைகளான கண்டனங்கள், அனுதாப அறிவிப்புக்கள், ஆட்சியாளரிடம் அவசர வேண்டுகோள்; அரசுகளோ அஞ்ச வேண்டாம், ஆணையிட்டிருக்கின்றோம் அலசி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி என்று குறிப்பிட்டுள்ளனர். அலசி ஆராய்வார்களா? ஆராய்ந்தாலும் அறிக்கை சமர்ப்பிப்பார்களா?

ஆறு நாளில் எல்லாம் அடங்கிவிடும். அடுத்த குறி யார் மீதோ? ஆண்டவனுக்கும், அராஜகக் கும்பலுக்கும் தான் வெளிச்சம்.

அரச பாதுகாப்பிலுள்ள சிறைக்குள்ளே பலநூறு கண்களாக நாங்கள் பார்த்திருக்க சிறை அதிகாரிகள் முன்பாக எங்கள் சகோதரர்களை கண்ட துண்டமாக வெட்டிக் கொன்றவர்களை மூன்று வருடங்களாகியும் கைது செய்யவோ அவர்களுக்குத் தண்டனை வழங்கவோ முன்வராத அரசு நிமலராஜன் குடும்பத்துக்கு நீதி வழங்கும் என்ற நல்ல பகற் கனவில் நாமிருக்கவில்லை. வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் எவரும் எதிர்பார்க்கவும் மாட்டார்கள்.

இந்தத் துரோகக் கும்பல்களின் கொடூரக் கொலைகளில் இருந்து எம்மை நாமே காத்துக் கொள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் விழிப்போடு இருக்க வேண்டும். அவ்வாறிருக்கின்ற அதேவேளை உண்மை ஜனநாயகத்தை நிலை நாட்டவும், அநியாயத்துக்குத் துணை போகும் துரோகக் கும்பல்களின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தவும் தெளிந்த சிந்தையோடும், தீர்க்கமான உறுதியோடும் துணிந்து செயற்பட வேண்டும். இதுவே நிமலராஜனுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

இப்படித தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.27

தீவக கல்வி வலய மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகின்றன.

நாளை இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**18 வயதுப் பிரிவு**

★ நெடுந்தீவு ம.வி.அணி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி.

**16 வயதுப் பிரிவு**

★ நயினாதீவு கணேசா வித்தியாலய அணி எதிர் நெடுந்தீவு ம.வி. அணி. (ஐ-3)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். மாவட்டத் தாச்சிச்சங்கத்தினால் உடுவில் ஞானப்பிரகாசர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறும் அரை இறுதி ஆட்டத்தில் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் மல்வம் ஞானப்பிரகாசர் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஐ-3)

### ரெலோ உறுப்பினரின் வீடியோக்கடை எரிந்து நாசம

வவுனியா-வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள வீடியோக்கடை ஒன்று நேற்றுமுன்தினம் இரவு7மணியளவில் இனம்தெரியாத நபர்களினால் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடை கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ரெலோ அமைப்பின் சார்பில் போட்டியிட்ட அழகன் வடிவேல் என்பவருக்குச் சொந்தமானது எனவும் -

[illegible] யானர் சென்ற சில நிமிட நேரத்தில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதாகவும-வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், மருதனார்மடம் விவசாயக் கல்லூரி என்பவற்றின் கல்லூரித் தினம் கடந்த 7 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி ஏபல் கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு.ஆர்.முத்துரட்ணானந்தன், திருமதி எஸ்.வீ.ஜெபநேசன் ஆகியோர், தொழில் நுட்ப நிறுவன இயக்குநர், விவசாயக் கல்லூரி அதிபர் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள், நிறுவன கல்விசார் ஊழியர்கள் ஆகியோரால் ஏபல் கலையரங்கிற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது.

*(படம்:- வலிகாமம் தெற்கு செய்தியாளர்) (ஐ-152)*



யாழ். திருமறைக் கலாமன்றத்தினர் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் பாடசாலைகளிலும் சிறுவர்களை மகிழ்வித்து உளநெருக்கீடுகளில் இருந்து அவர்களை விடுவிக்கும் நோக்குடன் சிறார் மகிழ்வரங்க செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிகழ்வில் 'கூடித் துயர் வெல்' என்னும் சிறுவர் நாடகத்தையும் மேடையேற்றி வருகின்றனர். இந்நாடகம் சிறுவர்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்கான சிந்தனையைக் கொடுப்பதுடன் பெரியவர்களுக்கும் இச்சமகாலத்தில் ஒரு காத்திரமான செய்தியைக் கொடுத்து நிற்கின்றது பலராலும் வரவேற்கப்படும் இந்த அரங்கின் ஒரு காட்சியை படத்தில் காணலாம்.

*(படம்: அரியாலை செய்தியாளர்) (ஐ-17)*

### புலிகள் ஊடுருவியிருந்த

# மாபிள் பீச் பகுதியில் படையினர் தேடுதல்

கொழும்பு,ஒக்.27

திருகோணமலை மாபிள் பீச் பகுதியில் ஊடுருவியுள்ளனர் என்று கருதப்படும் விடுதலைப் புலிகளைக் கண்டு பிடிப்பதற்காகப் படையினர் நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்குத் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகத்துக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திய விடுதலைப்புலிகள் அங்கிருந்து தப்பிச் சென்று மாபிள பீச் பகுதியை அண்டிய காடுகளில் தங்கியுள்ளனர் என்றும் -

அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளைப் படையினர் ஆரம்பித்துள்ளனர் என்றும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இந்த நடவடிக்கையின்போது விடுதலைப்புலிகளின் இரு உறுப்பினர்களின் சடலங்களையும் ரி-56 ரகத் துப்பாக்கிகள் இரண்டு உட்படப் பல ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியதாகப் படைத்தரப்பினால் தெரிவிக்கப்பட்டது. (இ-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீவிரவாதிகள் என்று நினைத்து
# மியான்மர் படை தாக்கியதில்
# 5 இந்திய இராணுவத்தினர் பலி!

புதுடில்லி, ஒக். 27
மியான்மர் நாட்டுப் படைகள் நடத்திய தாக்குதலில் இந்திய ராணுவத்தின் அசாம் துப்பாக்கி பிரிவைச் சேர்ந்த 5 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

மியான்மரில் இராணுவ அரசுக்கு எதிராகப் போராடி வரும் 'கப்பலாங்' தீவிரவாதிகளின்முகாம் ஒன்றை தாக்கி அழிக்கும் நோக்கில் எல்லைப் பகுதியில் சென்று கொண்டிருந்த **400 மியான்மர்** இராணுவத்தினர் அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்தியப்படைகளை தீவிரவாதிகள் எனத் தவறாகக்கருதித் தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய இராணுவத்தினரும் மியான்மர் படைகளின் தாக்குதலை நாகலாந்துத் தீவிரவாதிகளின் தாக்குதல் எனக்கருதி பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தவறுதலாக பரஸ்பரம் ஏற்பட்டமோதலில் இந்தியபடையினரில் 5 பேர் இறந்ததாகத் தெரிவித்த இராணுவ அதிகாரி ஒருவர், மியான்மர்படைகளின் உயிரிழப்புக் குறித்து தகவல் எதுவும் இதுவரை தெரிய வரவில்லை எனக் கூறினார்.

## கிழக்குத் திமோரில் ஊடுருவும் இந்தோனேசிய ஆயுதக் குழு

சிட்னி, ஒக் 27
மேற்கு திமோரில் இருந்து கிழக்குத் திமோருக்கு வந்து தாக்கி விட்டுத் தப்பியோடும் உபாயத்தை இதுவரை கடைப் பிடித்து வந்த இந்தோனேசிய அரசின் ஆதரவுடனான ஆயுதக் குழுக்கள் தற்போது கிழக்குத் திமோருக்குள் ஊடுருவி அங்கேயே தங்கியிருந்து வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஐ. நாவின் மூத்த அதிகாரியான சேர்ஜியோ வீராடி மேல்லோ தெரிவித்தார்.

கிழக்குத் திமோரில் தங்கியிருந்து பணிபுரியும் மெல்லோ ஆஸ்திரேலியாவில் ஐ. நாவின் ஆண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வந்த போது இதனைக் கூறினார்.

கிழக்குத் திமோரில் உள்ள ஐ நா. சமாதானப் படைகளின், பலம் ஆயுதக் குழுக்களைச் சமாளிக்கும் அளவிற்கு மேலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தோனேசியா விடமிருந்து கிழக்குத் திமோர் விடுதலை பெற்றதை விரும்பாத இந்தோனேசிய ஆதரவு ஆயுதக் குழுக்கள் திமோரியர்கள் மீதும், அவர்களுக்கு உதவும் ஐ நா. பணியாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருவது தெரிந்ததே.

## 29 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றனர்

இராமேஸ்வரத்துக்கு நேற்று முன்தினம் 29 இலங்கைத் தமிழ் அகதிகள் வந்து சேர்ந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்திவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 16 குடும்பங்கள் பிளாஸ்டிக் படகு ஒன்றின் மூலம் இராமேஸ்வரம் அருகே உள்ள அரிச்சல் முனையை வந்தடைந்ததாகவும் —

அவர்களை இந்தியக்கடற்படையினர் மீட்டதாகவும் கடற்படை அதிகாரி சக்ரவர்த்தி விசாரணை நடத்திய பின்னர் இவர்களை இராமேஸ்வரம் பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் கூறப்படுகிறது.

தற்போது இலங்கைத்தமிழ் அகதிகள் 29 பேரும் இராமேஸ்வரம் பொலிஸாரினால் மண்டபம் சிறப்பு அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-8)

## மத்திய அரசுக்கு முன்னறிவிப்பு

புதுடில்லி, ஒக். 27
இந்தியாவில் டீசல் விலை உயர்வைத் திரும்பப் பெறாவிட்டால் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அகில இந்திய மோட்டார் போக்குவரத்துக் கழகம் மத்திய அரசுக்கு முன்னறிவிப்புச் செய்துள்ளது.

## 68 தீவிரவாதிகள் அசாமில் சரண்

அசாம், ஒக். 27
இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடி வரும் தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்த 68 தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் முதல் அமைச்சர் முன்னிலையில் சரண் அடைந்தனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 3 ஆயிரம் தீவிரவாதிகள் அசாமில் சரணடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## கோவா, உ.பியில் பா.ஜ.க முதல்வர்கள்

இந்தியாவின் கோவா மாநிலச்சட்ட சபையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் நால்வர் ஆதரவளித்ததைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவைச் சேர்ந்த மனோகர் பாரியாரை மந்திரி சபை அமைக்கும்படி ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

இதேசமயம் உத்திரப் பிரதேசத்தில் ஆளும் பாரதீய ஜனதா அரசின் முதலமைச்சர் பதவியிலிருந்து ராம்பிரகாஷ் குப்தா விலக்கப்பட்டு ராஜ்நாத்சிங் பதவியேற்க உள்ளார்.

## கர்நாடக யோசனை நிராகரிப்பு

பெங்களூர், ஒக். 27
நடிகர் ராஜ்குமாரின் விடுதலை தொடர்பாக மைசூரைச்சேர்ந்த ஒருவரைத் தூதராக அனுப்பும் கர்நாடக அரசின் யோசனையை சந்தன மரக்கடத்தல் காரன் வீரப்பன் நிராகரித்து விட்டதாக கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணாவும் — அடுத்த பயணத்தின் போது. ராஜ்குமார் கட்டாயம் மீட்கப்படுவார் என்று நக்கீரன் கோபாலும் தெரிவித்துள்ளனர். (ஒ)

---

## தவறிவிட்டது

பள்ளிவாசல் மௌலவியுடைய இஸ்லாமிய மதம் சம்பந்தமான அரபு நூல்கள் அடங்கிய கறுப்பு நிறப்பை ஒன்று பருத்தித்துறை இறங்கு துறையில் 26- 10- 2000 நேற்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து முஸ்லிம் பள்ளிவாசல், பெரிய கடை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**முஸ்லிம் பள்ளிவாசல்**
பெரியகடை, (79919) யாழ்ப்பாணம்.

---

## வாழ்த்துகின்றோம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர்
**உயர்திரு. ந. சிவகடாட்சம்**
அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளதையிட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி அரிராஜசிங்கம்
(79913) கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

---

## வாழ்த்துகின்றோம்

யா\இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய
மாணவியும்
வரணி, சேவலப்பிட்டி கந்தசாமி தேவஸ்தான
பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. குகநாதசர்மா
அவர்களின் புதல்வியுமான
**செல்வி கு. நிருஜா**
தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை 2000 இல் 153 புள்ளிகள் பெற்று வித்தியாலயத்திற்கு பெருமை தேடித் தந்தமைக்காக வாழ்த்துகின்றோம். இந்தப் பெருமைக்கு வித்திட்ட ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(சி/13593)

---

## கிரிக்கெட் சூதாட்டம் குறித்த அறிக்கை இன்று கையளிப்பு

கிரிக்கெட் சூதாட்டம் குறித்து மத்திய புலனாய்வுத் துறையினர் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான இடைக்கால அறிக்கை இந்திய அரசின் விளையாட்டுத் துறை அமைச்சர் சுக்தேவ் சிங்டின்சாவிடம் இன்று கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில், இந்தியாவைச் சேர்ந்த 5 கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ஒரு அதிகாரி ஆகியோர் கிரிக்கெட் சூதாட்டத்தால் லாபமடைந்ததாகவும் — 4 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு வீரர்களுக்கும், சூதாட்டக்காரர்களுக்கும் இதில் பங்கிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இடைக்கால அறிக்கையை அடுத்து மேற்கொண்டு விசாரணைகள் நடத்தப்படும் என்று மத்திய புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஒ-8)

---

### வரலாற்றில் முதல் தடவையாக
## அமெரிக்க அதிபர் விடுத்த தீபாவளி வாழ்த்துச் செய்தி

வாஷிங்ரன், ஒக். 27
தீபாவளியை ஒட்டி, அமெரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் வாழ்த்துச் செய்தி வெளியிட்டார். இந்து சமயப் பண்டிகைக்காக அமெரிக்க அதிபர் ஒருவர் வாழ்த்துச் செய்தி விடுப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்து சமயப் பின்னணியில் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அமைந்த தீபாவளிப் பண்டிகை, வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டில் இந்திய மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் பிரதிபலிப்பதாக கிளின்ரன் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த மாதம் நடைபெற உள்ள அதிபர் பதவிக்கான தேர்தலில், அங்கு வாழும் இந்திய மக்களின் ஆதரவைப்பெற இரு பிரதான கட்சிகளும்' முயற்சித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

---

## விமானம் விபத்துக்குள்ளானதில் ரஷ்யாவில் 82 பேர் மரணம்!

ரஷ்ய ராணுவ விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த 8 குழந்தைகள் உட்பட 82 பேரும் உயிரிழந்தனர்.

ராணுவ அதிகாரிகள் சிலரும், அவர்களது குடும்பத்தவர்களும் பயணம் செய்த ராணுவப் பயணவிமானம் ஜோர்ஜியா குடியரசு நாட்டு எல்லையில் உள்ள மலையில் மோதி நொருங்கியதாகவும் இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த அனைவரும் பலியானதாகவும் —

ரஷ்ய விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்கு பனிமூட்டம் காரணம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். (ஒ-8)

---

## உரும்பிராய் காளி அம்பாள் ஆலய கேதார கௌரி நோன்பு

இன்று (27-10-2000) வெள்ளிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு கேதார கௌரி நோன்பு நடைபெறும். தொடர்ந்து செல்வி சந்திரபாலன் உதயசந்திரிகா அவர்களது வயலின் கச்சேரி நடைபெறும்.

பரிபாலன சபை
உரும்பிராய். (79918)

---

## மரண அறிவித்தல்

இணுவில் மேற்கு
**திருமதி கமலராணி உலகேஸ்வரன்**
(இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன், கல்லூரி)

இணுவிலைச் சேர்ந்த திருமதி கமலராணி உலகேஸ்வரன் நேற்று (26 - 10 - 2000) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் திரு. பெ உலகேஸ்வரன் (பொறியியலாளர் வீதி அபிவிருத்தித் திணைக்களம், வவுனியா) அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற ச. தம்பிஐயா (மலாயன் பென்சனர்), திருமதி த. சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வை. பெரியதம்பி, திருமதி பெ. கண்மணி ஆகியோரின் அன்பு மருமகளும், முரளிதரன் (லண்டன்), திருமதி மீரா முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், வைத்திய கலாநிதி கோ. முகுந்தன் (தேசிய வைத்தியசாலை, கொழும்பு) அவர்களின் அன்பு மாமியாரும், திரு த. தேவராசா (இளைப்பாறிய பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), திருமதி தர்மகுணராணி சண்முகலிங்கம், திருமதி அருந்தவராணி கதிர்காமநாதன், திரு. த. இணுவை சுப்பிரமணியம் (கடவுள்—அதிபர் கட்டுடை சைவ வித்தியாசாலை), திரு. த. செல்வானந்தராஜா (செல்வம்) ஆகியோரின் அருமைச் சகோதரியும்திருமதி கலைமகள் நடராசா (கொழும்பு), திரு. பெ. சிவகடாட்சம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சி. தம்பிஐயா
'மீராலயா'
இணுவில் மேற்கு,
இணுவில்.

திரு. பெ. உலகேஸ்வரன்
51A, காலி வீதி,
மவுண்ட் லெவனியா.
தொலைபேசி 01 - 729583.
(79922)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பர் மயில்வாகனத்தின் புத்திரன்

**இ. நிமலராஜன்**

(பி. பி. சி., ஐ. பி சி. செய்தியாளர்)

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயருற்றோம். அவரது பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் பெற்றோருக்கும் எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

லாலாசோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(சி/13577)

## நினைவஞ்சலி

21-05-2000 அன்று அகால மரணமடைந்த எமது சபை ஊழியர்

திரு. செ. குமார்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் பொ. செல்லக்கண்டு**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்.
வலி. வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

(சி/13562)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி ப. ராஜினி
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா பரராஜசிங்கம்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் எமது சகோதரிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2 ஆம்வருட மாணவர்கள்,
இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(79897)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வைத்திய கலாநிதி

**அருணாசலம் சிவபாதசுந்தரம்**

## நினைவுப் பேருரை

வைத்திய கலாநிதி அருணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 2000 - 10 - 27 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை இணைப் பேராசிரியர் எஸ். பவானி அவர்கள்

"CONCEPTS AND APPROACHES OF TRADITIONAL MEDICINE IN CHILD CARE"

எனும் தலைப்பில் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

குழந்தை மருத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணராகிய வைத்திய கலாநிதி அ. சிவபாதசுந்தரம் அவர்கள் சீரிய பண்புகளும் தொண்டு மனப்பான்மையும் கொண்டவர். அவர் 1987 இல் யாழ். போதனா வைத்தியசாலையிற் கடமையாற்றிக் கொண்டிருந்த வேளையில் 'அமைதிப்' படையின் கொடூரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் துறந்தார். இவர், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களின் பேரனாருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர்வலர்கள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

துணைவேந்தர்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

(சி/13576)

## நியமனம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். மாவட்டத்தில் தென்னை அபிவிருத்தி அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

விவசாயத்துறையில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் இப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்தினை 'அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-5-ரி)

## கட்டுரைப்போட்டி

வலிகாமம் தெற்கு, ஒக். 27

வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போஷாக்குக் கல்வி பற்றிய கட்டுரைப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

(ஐ-152)

## திறந்த பல்கலை மாணவர் கலந்துரையாடல்

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பிராந்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பட்டமேற் கல்வி டிப்ளோமா, கல்வி மாணி டிப்ளோமா, பொறியியல் கல்வி டிப்ளோமா, பட்டமேற் கல்வி டிப்ளோமா, முகாமைத்துவத்தில் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களும் புதிதாக பதிவுகளை மேற்கொண்ட மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கலந்துரையாடலின் இறுதியில் யாழ். பிராந்திய நிலைய கற்பித்தல் செயற்பாடுகளை இடைநிறுத்தியமையை ஆட்சேபித்து உயர்மட்ட அதிகாரிகளுக்கு மாணவர்கள் சார்பில் மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தில் 2001 ஆம் கல்வி ஆண்டிற்கான கற்பித்தல் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் புதிதாகப் பதிவுகளை மேற்கொண்ட நூற்றுக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ரி)

## அ. அட்டைகள் மீட்பு

நெல்லியடி, ஒக் 27

தென்மராட்சியைச் சேர்ந்த இருவரின் தேசிய அடையாள அட்டைகள், விசேட அட்டைகள் என்பன நெல்லியடிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முகமாலை வடக்கு பளையைச் சேர்ந்த நமசிவாயம்—சாந்தமலர், மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா ஜெயச்செல்வம் ஆகியோரின் அட்டைகளே மீட்கப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையத்தில் வந்து அவற்றைப் பெற்றுக் கொளுமாறு, நெல்லியடி [illegible] தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

## ஆண்டு இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சைகள் அனைத்தும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகி 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

அடுத்த மாதம் 24 ஆம் திகதி இறுதித் தவணை விடுமுறை மாணவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-ரி-5]

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

யா/ நல்லூர் தெற்கு
ஸ்ரீ விக்னேஸ்வரா மகா வித்தியாலய

**மாணவி செல்வி கனகசபாபதி ஜானகி**

148 புள்ளிகள் பெற்று 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு அவரைப் பாராட்டி மேன்மேலும் கல்வியில் முன்னேற்றமடைந்து வளமாக வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

அன்புடன் மாமா
ச இரங்கநாயகம்

வேலணை தெற்கு,
துறையூர்.

(79873)

## NEW SCIENCE COLLEGE
### JAFFNA

பௌதிகவியல்

திரு. கருணாநிதி B.Sc. Special)

''மின்னியல்''

பிரிவு I — SAT. SUN. 8.00 — 9 00
பிரிவு II — SAT. SUN. 2.00 — 3.00

ஆரம்பம்: 28-10-2000 சனிக்கிழமை

(79869)

அங்கத்தவர்களுக்கு மாத்திரம்

அரசாங்க குடும்ப சுகாதார சேவை
உத்தியோகத்தர் சங்கம்

## 25 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 29-10-2000 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி

இடம்:
யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை, முன்பாக)

சகல குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களையும் பங்கு பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேம்.

தலைவர் கௌரவ காரியதரிசி

(79889)

## யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
## ஜயரத்தினம் நினைவு நாளும் கனிஷ்டபிரிவுபரிசளிப்புவிழாவும்

தலைவர்: திரு. பொ. சுந்தரலிங்கம் (அதிபர்)
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 2000-10-29 காலை 9.00 மணி

பிரதம விருந்தினர்:
உயர்திரு. திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

சிறப்பு விருந்தினர்கள்:
உயர்திரு. ஆ. வ. கணேசலிங்கம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

நினைவுப் பேருரை:
உயர்திரு வல்லிபுரம் சத்தியசீலன்
(திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்குதல்:
பிரதம விருந்தினர்

நன்றியுரை:
திரு. சு. இராமலிங்கம்
(பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
பெற்றோர், பழைய மாணவர்,
நலன் விரும்பிகள்.

(79896)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

எமது நண்பன்
திரு. வ. விக்டர் பேபி அவர்களது மகன்
**செல்வன் வி. ஜீசஸ்**
**புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகள்**
பெற்று சித்தி அடைந்ததையிட்டு
எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**பனை தென்னை வள அபி. கூ. சங்கம்,**
(79887) **வேலணை.**

## பதின்மூன்றாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



தோற்றம் 24 — 06 — 1924
மறைவு 27 — 10 — 1987

### அமரர் சண்முகம் வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய பொலீஸ் அலுவலர்)
திதி: 01—11—2000

அன்பின் திருவுருவே அறிவின் சிகரமே
எங்கள் ஐயாவே எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட இத்தினத்தில் எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக
அர்ப்பணம் செய்கின்றோம்.

தங்கள் புனித ஆத்மா சாந்திபெற எல்லாம்
வல்ல ஈசனை வேண்டி நிற்கும்:

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

'ரமேஸ்கிரி',
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (79724)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1943 — 09 — 10
மறைவு 1999 — 11 — 08

இணுவிலைப் பிறப்பிடமாகவும்
வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் சங்கரப்பிள்ளை ஜெகநாதன்

(கணக்கீட்டு அலுவலகம், தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்)
திதி:- 2000—10—27

அன்பின் பிறப்பிடமே!
கருணையின் இருப்பிடமே!
கண்ணாய் எமை வளர்த்த
அன்பு அப்பாவே! எமக்காய்
தன்னை உருக்கியே
ஒளி கொடுத்த குலவிளக்கே!
விண்ணாய்ப் பறந்து
நீ அணைந்து ஒரு வருடம்
இம்மைப் பிறப்பழிந்து
ஏழ் பிறப்புப் பிறந்தாலும்
உமை மறவோம்
ஏழ் பிறப்பும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**குடும்பத்தினர்**

8(20), B.A தம்பி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (79804)

## ஸ்தாபகர் தினம்

வலிகாமம் தெற்கு, ஒக். 27
கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் க. சிவாஜி தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒறேற்றர் கலையரங்கில் நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேல் இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்

நிறுவுநர் நினைவுப் பேருரையினை யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன ஆங்கிலத்துறைத் தலைவர் வே. கருணாநிதி நிகழ்த்துவார்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிஆசியுரை வழங்குவார்.

திருவாட்டி ராஜினி குமாரவடிவேல் பரிசில்வழங்குவார்.

ஆசிரியர் ஆறு. திருமுருகன் நிறைவுரையாற்றுவார்.

(ஐ-152)

## ஆசிரியர் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஒக். 27
வலிகாமம் கல்வி வலயத்தில் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வினைத்திறன் விருத்தி சம்பந்தமான கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் பிரதி ஞாயிறு தோறும் இக் கருத்தரங்கு தொடர்ச்சியாக நடைபெறும். (ஐ-152)

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக். 27
உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இம்மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

(ஐ-152)

## கருத்தரங்கும் செயலமர்வும்

வலிகாமம்தெற்கு, ஒக். 27
வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் 1, தரம் 2 இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணிதபாட செயற்றிட்டம் தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் தற்போது நடைபெற்று வருகின்றன

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரிய நிலையம், சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி போன்ற இடங்களில் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு — கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இருந்து வருகை தந்துள்ள வள ஆளணியினரின் வழிகாட்டலின்கீழ்இக்கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-152)

## 163 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக் 27
பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம்வந்துசேர்ந்த செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் கப்பலில்வெளியூர்த்தபால்கள் அடங்கிய 163 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 79 பொதிகள் [illegible] யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-ரி)

## நன்றி கூறுகின்றோம்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பாரம்பரிய ஆலவிருட்ச கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு, இடம்பெயர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாகியும் உங்கள் சொந்த வீடுவாசல்களையும், பொன் விளையும் நிலங்களையும் எட்டிக்கூடப் பார்க்கமுடியாமல் அல்லற்பட்டு அகதி முகாம்களிலும், இரவல் வீடுகளிலும் காலங்கழித்தும், கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தும்கூட உங்கள் வாக்குகளை வாரிவழங்கி வெற்றிபெறச் செய்த வலி. வடக்கு மக்களுக்கும், குறிப்பாக தந்தையின் தொகுதியான காங்கேசன்துறை தொகுதி வாழ் மக்களுக்கும் ஏனைய யாழ், மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும் வலி. வடக்குப் பிரதேச சபை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர், உறுப்பினர்கள் ஆகிய நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வலி. வடக்குப் பிரதேச சபை**
**தமிழர் விடுதலைக் கூட்டணி**
**தலைவர், உறுப்பினர்கள்.**

(79872)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 — 05 — 1932
மறைவு 26 — 09 — 2000

### திருமதி சபாபதி சிவப்பி

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய தாயே!
எமக்கு நல்ல மார்க்கத்தைக் காட்டி
நல்வாழ்வில் குடியிருக்கும் பண்பினை
புகட்டிய திருவிளக்கே!
இன்று எம் அனைவரையும் கதறிபழவிட்டு
இறைவனின் திருவடியைத் தேடிச் சென்றதேனோ?

**— குடும்பத்தினர்**

கோம்பு,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (79881)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 — 06 — 1951
மறைவு 07 — 11 — 1999

### அமரர் கந்தையா திருநாவுக்கரசு

திதி: 27—10—2000

எம் ஆசை அப்பாவே!
உம் இரு பாலகர்களும் — உங்கள்
ஆசை முத்தங்கள் பெற்று
ஆண்டொன்று ஆனதப்பா.
நின்முகம் காணாது தவிக்கின்றோம் ஐயா!
ஆனாலும் உம் நினைவுகளோடு
என்றும் வாழ்வோமையா!
உமது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**உறவினர்கள்.**

தகவல்:
தி. மல்லிகாதேவி (மனைவி)
கலட்டி லேன்,
கோண்டாவில் தெற்கு. [79876]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பதில் கூறுமா?

நல்ல நாள் பெருநாளான தீபாவளி தினத்தன்று — நேற்று — தமிழ் மக்களுக்குப் பத்திரிகைகள் பெரும் சோகச் செய்தியையே தந்தன. பண்டாரவளைத் தடுப்பு முகாமில் வைத்துத் தமிழ் இளைஞர்கள் 25 பேர் வெட்டியும் கொத்தியும் கொன்று குவிக்கப்பட்டனர் என்ற சோகச் செய்தியையே அவர்கள் நேற்றுக் காலை வாசித்து மனம் வேக நேர்ந்தது.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பில்லை. தென்னிலங்கையில், தமிழருக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டுவோர் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். எந்த அரசு — அது நீலமா, பச்சையா எதுவாக இருந்தாலும் — அந்த அரசின் பாதுகாப்பில் வைக்கப்படும் தமிழர்களின் உயிருக்குக்கூட உத்தரவாதம் இல்லை.

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் நடைபெற்ற காட்டுமிராண்டித் தனம் மேற்கூறிய மூன்று உண்மைகளையும் நிலை நிறுத்துகின்றது. 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜுலைக் காலத்தில் வெலிக்கடைச் சிறையில் இரண்டு நாள்கள் நடத்தப்பட்ட தமிழர் கொன்று குவிப்பு உலகில் சிங்கள மக்களுக்கு பெரும் அபகீர்த்தியை உண்டாக்கியது.

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கொலைகளில் அப்போதைய அரசாங்கத்தின் கறை படிந்த — இரத்தம் தோய்ந்த — கை பின்னால் இருந்தது என்பது காலப் போக்கில் அம்பலமானது.

பதினேழு வருடங்கள் கடந்த பின்னரும் வெலிக்கடைச் சிறைக் கொலைகளின் அதே பாணியில் பண்டாரவளைத் தடுப்பு முகாம் படுகொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இந்தக் கொலைகளுக்கும் அரசியல் பின்னணி இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சிங்கள மக்களில் மனித நேயம், மனிதாபிமானம் உடையவர்கள் இல்லையென்ற முடிவுக்கு எவரும் வரமுடியாது. ஆனால்தெற்கின் அரசியல்வாதிகள் இனவாதத்தை தமது மூலதனமாக்கியே தொடர்ந்து அரசியல் வாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; மக்களையும் அவ்வழிக்கு இழுத்துச் செல்கிறார்கள் என்பதே யதார்த்தமாகி உள்ளது.

சிறைக் கைதிகளானாலும் சரி, விசாரணை, வழக்குத் தீர்ப்பை எதிர்பார்த்திருக்கும் தடுப்புக் காவல் கைதிகளாயினும் சரி, அவர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு. இது சர்வதேச விதிமுறையும் நியதியும் ஆகும்.

அவ்வாறிருந்த போதிலும் ஐ.தே. கட்சி ஆட்சியில் வெலிக்கடைச் சிறைச்சாலைகளிலும், பொ. ஐ. முன்னணியின் முதல் ஆட்சியில் களுத்துறைச் சிறையிலும் தமிழ் இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இப்போது பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் புதிய அரசு பதவியேற்ற— அமைச்சரவை பதவியேற்ற— ஒரு வாரத்திற்குள்ளேயே பண்டாரவளைத் தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைகளில், தடுப்பு முகாம்களில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டோரை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக புதிய நீதி அமைச்சர் தெரிவித்த சில நாள்களில் இந்தக் கொடூரம் நிகழ்ந்திருக்கிறது.

அரசாங்கம் தமிழர்களையும் இந்நாட்டு மக்கள் எனக் கருதினால், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாத இயலாமையை ஏற்றுக் கொண்டு ராஜினாமாச் செய்யவேண்டும். செய்யுமா அவ்வாறு.... ?

# கேதார கௌரி விரதத்தின் சிறப்பு

"சக்தி இருந்தால் செய்; இல்லையேல் சிவமே என்று இரு," என்பது ஆன்றோர் வாக்கு. பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானும் இதனை உணர்த்தும் பொருட்டு சக்தியின்றிச் சிவமில்லை; சிவமின்றிச் சக்தியில்லை என்பதை விளக்குவதாக எழுந்த மூர்த்தமே கேதார கௌரிநாதர்.

கேதார கௌரி விரதம் சிவபெருமானுக்குரிய விரதமாகும். அதாவது அம்பிகை சிவபெருமானைக் குறித்து அனுட்டித்த பெருமையையுடையது. சிவபெருமானையும் பார்வதி அம்மையாரையும் அர்த்தநாரீசுவரர் வடிவில் போற்றி வழிபடும் விரதம் இது.

புரட்டாதி மாதத்துச் சுக்கில பட்சத்துத் தசமி முதலாக ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துத் தீபாவளித்திருநாளான அமாவாசை வரை 21 நாள்கள் இந்த விரதம் அனுட்டிக்கப்பட வேண்டும். இதில் விசேஷம் என்னவென்றால் ஆண், பெண் இரு பாலாருமே இந்த விரதம் நோற்கலாம். தனக்கு நல்ல இல்வாழ்வளித்த கணவர் நீண்டநாள் சகல ஐசுவரியத்தோடும் வாழ வேண்டும் என்று பெண்களும் தனக்குத் துணையாக வந்து இல்வாழ்க்கைத் துணைவியாக விளங்கும் மனைவி தீர்க்க சுமங்கலியாக நீண்ட நாள் வாழவேண்டுமென்று ஆண்களும் இவ் விரதத்தை அனுட்டிப்பர்.

இருபத்தொரு நாள்களும் தினமும் மூவிலை வில்வத்தினால் இலிங்கத்துக்கு அர்ச்சனை செய்து 21 இழையினால் ஒரு சயிறு முறுக்கி எடுத்து, ஒவ்வொருநாளும் ஒவ்வொரு முடிச்சாக 21 நாளும் முடிந்து கொண்டு வருவர். இது பூசையிலிருக்கும். இந்த விரதத்தின்போது ஆடவர்கள் வலக்கையிலும் மாதர்கள் இடக்கையிலும் காப்புக்கட்டி சிவபூசை செய்த பின்னரே தினமும் மதிய போசனஞ் செய்தல் வேண்டும். இறுதியாக சதுர்த்தசி நாளில் உபவாசமிருந்து சிவபிரானை மனத்தில்தியானித்து தேவார பாராயணஞ் செய்து மறுநாள் உதயத்தில் பாரணம் பண்ணுதல் முறைமை.

இந்த விரதம் பற்றி ஒரு புராண வரலாறுமுண்டு. ஒரு முறை பார்வதி தேவியார் கௌதம முனிவரை நோக்கி, 'தபோதனரே! யான்சிவபெருமானது வாமபாகத்திற் கலந்து கொள்ள விரதமிருக்க விரும்புகின்றேன். அந்த விரதம் பற்றியும் அனுட்டிக்கும் முறை பற்றியும் தாங்கள் எனக்கு விவரமாக உரைத்தல் வேண்டும்.' என்று கேட்டார்.

அது கேட்ட முனிவர், "அம்பிகையே! பூவுலகில் அனுட்டிக்கும் விரதங்களுள் சிறந்த விரதம் கேதாரீஸ்வரர் விரதமாகும்" என்று உரைத்து அதனை அனுட்டிக்கும் முறையையும் சொல்லியருளினார்.

கௌதம முனிவர் கூறியவாறே பார்வதியும் விரதமிருந்து பரமசிவனை மகிழ்வித்தாராம். தன் விரத மகிமையால் காட்சி கொடுத்த கடவுளிடம் "தேவரீர் என் விரதத்துக்கு மகிழ்ந்து காட்சியளித்தீர். எனவே, நான் நோற்ற இவ்விரதத்தை பூவுலகில் யார் நோற்றாலும் நீண்ட ஆயுளும் புத்திரப் பேறும் சகல ஐசுவரியங்களும் பெறும் பேற்றினை வழங்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாராம் பார்வதி தேவியார்.

சிவபெருமானும் அதற்கு இசைந்தார். அது மாத்திரமன்றி இவ்விரதத்தின் மகிமையை அறிந்த தெய்வ கன்னியர்கள் பூவுலகுக்கு வந்து ஒரே நாளில் இதை அனுட்டிக்க முடிவெடுத்தனர். கங்கையில் நீராடி ஆசார சீலர்களாக ஆலமரத்தின் கீழ் சிவலிங்கம் வைத்து குத்துவிளக்கேற்றி சங்கற்பஞ் செய்து விரதத்தை ஆரம்பித்தனராம்.

முறைப்படி அபிஷேக ஆராதனைகள் செய்து 21 வெற்றிலை, பாக்கு, வாழைப் பழம், மஞ்சள், சந்தனம், வெல்லம், அதிரசம் வைத்து வணங்கினார்கள். இருபத்தோரிழையினாலான நூலை முறுக்கி தூப தீப சோடசோபசாரஞ் செய்து கைகளிற் கட்டிக் கொண்டார்கள். இதனைப் பார்த்து உலகோரும் இவ்விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கி விட்டனர் என்பது வரலாறு.

இன்றைய இக்கால கட்டத்தில் எமக்கு இன்னல் தீர்ந்து இடுக்கண் நீங்கி நன்மை பெருகி நானிலம் சிறக்க நாம் வாழ இந்த நல்ல விரதமான கேதாரீஸ்வரர் விரதத்தை அனுட்டித்து நற்கதி அடையலாம். ★

"அடியரன்"

### ஞானக் கதிர்

# அரச ஆஸ்பத்திரிகளில் புகை பிடிக்கத் தடை!

கொழும்பு, ஒக். 27

நாடு முழுவதிலுமுள்ள சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளும், அதன் சுற்றுப் புறங்களும் புகைத்தல் தடை வலயங்களாக சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இப் பிரகடனம் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அமுலுக்கு வரும் என்று சுகாதார அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இப் பிரகடனம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இதற்குத் தேவையான ஆலோசனைகளும், அறிவுரைகளும் அந்தந்த ஆஸ்பத்திரிகளின் பொறுப்பாளர்களுக்கு, சுற்றறிக்கைகள் மூலம் இவ் வாரம் முதல் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சகல குழந்தைகளுக்கும் நாளை போலியோ சொட்டு மருந்து

யாழ்ப்பாணம், ஒக். 27

ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் டிசெம்பர் 2 ஆம் திகதியும் இவ்வருடத்துக்குரிய போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் மாகாணப் பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

போலியோ என்னும் சிறுவர்களை மூடமாக்கியும், கொன்றும் வந்த கொடிய நோயை உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கத்தோடு உலகளாவிய ரீதியில் தேசிய எதிர்ச்சக்தி அளிக்கும் தினங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இலங்கையில் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் இவ் விசேட மருந்து கொடுக்கும் செயற்பாடு நடைபெற்று வருகிறது.

இவ்வருடம் நாளை 28 ஆம் திகதியும், டிசெம்பர் 2 ஆம் திகதியும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படவுள்ளது. சகல ஐந்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கும் இத்தினங்களில் தடை மருந்து கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு போலியோ சொட்டு மருந்து பூரணமாகக் கொடுக்கப்பட்டவர்கள், கொடுக்கப்படாதவர்கள் என்ற பேதமின்றி மேலதிகமாக இவ்விரு தினங்களிலும் தடை மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

வைத்தியசாலையில் உள்ள பிள்ளைகளுக்கும் இம் மருந்து கொடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது,

மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு மேலதிக நிலையங்கள் எல்லாப் பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் தமது பகுதியிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளவர்கள் அவ்வப்பகுதியில் இம் மருந்தைப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்பட்டுள்ளது.

தேசிய தடை மருந்து கொடுக்கும் திட்டத்துக்கு உலக சுகாதார நிறுவனம், 'யுனிசெவ்' நிறுவனம், சர்வதேச றோட்டரிக் கழகம், சர்வதேச அரிமாக் கழகம் ஆகியவை உதவி வருகின்றன.

தற்போதைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து தங்கியுள்ளவர்கள், தாம் தங்கியுள்ள இடத்திற்கு அருகிலுள்ள போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிலையத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை அவ்வப்பகுதி சுகாதார ஊழியர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

'எல்லோரும் சேர்ந்து போலியோவை உலகத்திலிருந்து ஒழிப்போம்'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-15-17)

### நாளை

ஐப்பசி 12
சனிக்கிழமை
திதி: பிரதமை
பிற்பகல் 2.00 வரை.
நட்சத்திரம்: சுவாதி
முற்பகல்: 8.14 வரை.
ஸ்கந்தஷஷ்டி
விரதாரம்பம்
சுபநேரம்: 3.03—4.33
ராகுகாலம்: 9.03—10.33
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தினமும் காலையிலும் மாலையிலும் சிறிது நேரம் தியானம் செய்யுங்கள். அது உங்கள் மனத்தை மெல்ல மெல்லப் பண்படுத்திக் கொள்வதற்கு பழகிக் கொடுக்கும்.

— சுவாமி சித்பவானந்தர்

## முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். நீராவியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முதியோர் கௌரவிப்பு நிகழ்வு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் சங்கத்தின் தலைவி திருமதி சு. நாகலோஜினி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அப்பகுதியைச் சேர்ந்த பெண் முதியோர்கள் சிலர் கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன. அத்துடன் இந்தச் சங்கத்தின் செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சிபெற்ற யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. (ஐ-10)

## சமய சந்நிதியில்

உரும்பிராய் காளிஅம்பாள் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கேதாரகௌரிநோன்பு அனுட்டிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து செல்வி சந்திரபாலன் உதயசந்திரிகாவின் வயலின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

## விரிவுரையாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

பலாலி ஆசிரிய கலாசாலையில் கற்பித்தற் பயிற்சி மேற்பார்வையில் ஈடுபட்டுள்ள சகல விரிவுரையாளர்களையும் முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கலாசாலைக்கு வருகைதருமாறு அதிபர் அறிவித்துள்ளார். [ஐ]

## உதை பந்தாட்டம்

வலிவடக்கு, ஒக். 27

வலிகாமம் கல்வி வலய கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவினர்களுக்கான அரை இறுதி ஆட்டம் இன்று வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

★ ★ ★

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க விளையாட்டுக்கழகத்தினால் வலி வடக்கு பிரதேச சபைத்தலைவரும். மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான அமரர் சு. ஸ்ரீ பாஸ்கரன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ கல்வயல் விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம்.

★ ஏழாலை ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம். (ஐ-86)

## மழையால் முந்திரிகை பாதிப்பு

உரும்பிராய், ஒக். 27

முந்திரிகைச் செய்கையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பழங்களை அறுவடை செய்யும் நேரத்தில் கடும் மழை தொடர்ந்ததனால் உரிய விலைக்குப் பழங்களை விற்க முடியாது போய்விட்டதாக உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். (ஐ-154)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தவறிவிட்டது

கோண்டாவிலைச் சேர்ந்த கிருஸ்ணராஜா ஜெயப்பிரதாஸ் என்பவருடைய விசேட அடையாள அட்டை நேற்று (26-10-2000) கச்சேரி வீதிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து குலம் கிறீம் ஹவுஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (79910)

நாகராஜா ராஜ்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.803503671v), விசேட அடையாள அட்டை (இல.0904023266) என்பன 20.10.2000 அன்று சித்தன் கேணிக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கண்ணா கிளினிக், பொன்னாலை வீதி, சித்தன்கேணி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (79882)

சுஜீவா மகேந்திரன் என்பவருடைய தேசிய அ.அ(இல.815053559v)யும், விசேட அ.அ(இல.0902016497)யும் 21.10.2000 அன்று கலட்டி லேனுக்கும் உப்புமடச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரு.இ. மகேந்திரன் ஸ்ரோர்ஸ், புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம வழங்கப்படும். (79841)

மானிப்பாய் மத்திய சந்தைக்கும் கிறீன் வைத்தியசாலைக்கும் இடையில் 19.10.2000 வியாழக்கிழமை அன்று பெறுமதியுடைய தங்க நகை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மனிதாபிமானப் பணியாகக் கருதி இ.வல்லிபுரம் (ஓய்வுபெற்ற அதிபர்), யாழ்.வீதி, மானிப்பாய் என்னும் முகவரியில் கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79859)

சிவலிங்கம் அனுசா என்பவரின் விசேட அ.அட்டை (இல.090808143), பிரிகேட் பாஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். உபதபால் அலுவலகம், வியாபாரி மூலை, பருத்தித்துறை. (C/13590)

மருதங்கேணி திருமதி பொன்னையா இலட்சுமிப்பிள்ளை என்பவரது தேசிய அ.அட்டையும், (இல.308110087v), விசேட அ.அட்டையும யாழ். அரசடி வீதிக்கும் ஆலடிச சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து K.K.S. வீதி, சிங்கம் புடைவை நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (79911)

## விற்பனைக்கு

நஷனல் பிறிச் (டபிள் டோர்), Black and white நஷனல் T.V. 20', நிப்போன் அன்ரனா, பூஸ்ற்றர், KDK பான்(FAN), 2 மொனி லிக்ஸ் மிக்சீ, நிச்சி தையல் மிசின்(ELECTRIC),(USHA) உஷா சீலிங் பான் (FAN) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு:- 44/7, மணத்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (79830)

ஜெனரேட்டர் விற்பனைக்கு(லிஸ்டர்) 22 HP, 12.5 Kw 3 பேஸ் டைனமோவும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செங்கமலம் வாசம், குளப்பிட்டி சந்தி, கொக்குவில். (79864)

"ஸ்கந்த ஷஷ்டி விரதம்-ஏன்? எப்படி? எப்பொழுது?" விரதமுறைகள், பாரணை, உத்தியாபனம 'கோப்பாய்-சிவம்' எழுதிய கைநூல் சர்வானந்தமய பீட வெளியீடு. விலை ரூ.20/- எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (79792)


Godrej

ISO 9001

கொள்ளையில்
இருந்து பாதுகாப்பு
தீயிலிருந்து பாதுகாப்பு



ஏக முகவர்கள்

மக்வூட்ஸ் லிமிட்டெட்

சில்லறை விற்பனை நிலையம்
இல. 377 டி.பி. ஜயா மாவத்தை.
கொழும்பு-10 தொ.பே 075-340287.

(C/13462)


## காணவில்லை

15-10-2000 ஞாயிற்றுக்கிழமை முதல் வெள்ளை நிறமுடைய, ஏற்ற இறக்க றோஸ் நிற முலைக்காம்புகளைக்கொண்ட, மொட்டைச் சணல் இன ஆட்டைக் காணவில்லை. காண்பவர்கள் இல.14, மடம் வீதி (முலவைச்சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத் தரவும். (79867)

## அபூர்வ ஜோதிடம்

அதிர்ஷ்டத்தை நோக்கிய வாழ்வு, தொல்லை தரும் நோய் அறவே நீக்கம் அனைத்திற்கும் சிறந்த பலன் கிடைக்கும். ஆடிய பாதம் வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. சனி, ஞாயிறு 8.30-5.00 (79893)

## பொய்யாமொழி ஜோதிடம்

தடைபெறும் திருமணம், பிரயாணம் விரைவில் நிறைவேற ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சனி, செவ்வாய். 140, பருத்தித்துறை வீதி (ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி), நல்லூர். ஞாயிறு பழம்பிள்ளையார் கோயில் மடம், மல்லாகம். சந்திக்கவும். (79845)

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஏகாந்த வீணை விற்பனைக்குண்டு. (திங்கள் வரை பார்வையிடலாம்). மங்களபதி, பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி, நல்லூர். (79914)

## தவறிவிட்டது

திருநெல்வேலியைச் சேர்ந்த சச்சிதானந்தமூர்த்தி வசந்தகுமாரி என்பவரது தேசிய அ.அட்டை, விசேட அ.அட்டை, கைச்சங்கிலி, தாலி என்பன கைப்பையுடன் யாழ். பெரியகடை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சச்சிதானந்தமூர்த்தி 36, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (79916)

## போஷாக்கு உணவு வழங்கல்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போஷாக்குக் குறைந்த சிறார்களுக்கு பருத்தித்துறை நகர சபை 35 ஆயிரம் ரூபா பெறுமதியான திரிபோஷா, அங்கர் பால்மா போன்றவைகளை வழங்கவுள்ளது.

இவை, ஒரு மாதத்தில் இரு தடவைகள் போஷாக்கற்ற சிறார்களுக்கு வழங்கப்படும் என பருத்தித்துறை நகரசபைத் தலைவா வின்சன் கென்னடி தெரிவித்தார். (ஐ-109)


தீவக லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும்

We Serve

# இலவச வைத்திய முகாம்

பாடசாலை மாணவர்களுக்கான
விசேட மருத்துவ பரிசோதனைகளும்
பொதுமக்களுக்கான

- ❖ இரத்த அழுத்தம்
- ❖ வாய்ப்புற்றுநோய்
- ❖ சலரோகம்
- ❖ கண் பரிசோதனை
- ❖ மார்புப் புற்றுநோய்
- ❖ பொது மருத்துவப் பரிசோதனை

(S.M.FERNANDO ஸ்தாபனத்தால்
கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும்)
(மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும்
வைபவமும் இடம்பெறும்)
ஆகிய இலவச மருத்துவ பரிசோதனையும், வைத்திய
ஆலோசனையும், மருந்து வழங்கலும்.

காலம் : 29.10.2000 ஞாயிற்றுக்கிழமை
(காலை 9.00 மணி முதல் பி.பகல் 2.00 மணிவரை)

இடம் : தம்பாட்டி (ஊர்காவற்றுறை) அரசினா
தமிழ்க்கலவன் பாடசாலை

தீவக லயன்ஸ் கழக, வைத்தியக் கலாநிதிகளினாலும், யாழ்.மருத்துவபீட மாணவர்களினாலும் நடத்தப்படவுள்ளது. சந்தர்ப்பத்தை தவறவிடாது அனைவரும் ஆலோசனைகளையும் வைத்திய வசதிகளையும் பெற்றுக்கொள்ள அழைக்கின்றோம்.

(79837) - தீவக லயன்ஸ் கழகம்.

அன்பளிப்பு: S.M.பெர்னான்டோ



# லாலாவின் அதிர்ஷ்டத்தில்

நீங்கள் ஒவ்வொருவரும்
பங்குகொள்ளுங்கள்?




லாலா இதோ எமது சோப்பின் உட்பகுதியிலிருக்கும் தகட்டின் மாதிரி வடிவம்.

லாலா நீலசோப், சன்சயின் சோப் இவற்றில் ஏதாவது ஒன்றை உங்கள் ஆடைகளில் தேய்த்துக் கொண்டிருக்கும் போது, சோப்பின் உட்பகுதியில் இருந்து லாலா சோப் அடையாளம் பொறிக்கப்பட்ட ஓர் பித்தளைத் தகடு வெளிவரும், அந்தத் தகட்டை நீங்கள் எடுத்து லாலா சோப் விற்பனையாளர்களிடம் அல்லது எமது விற்பனை வாகனத்தில் அல்லது லாலா சோப் தொழிற்சாலையில் கொடுத்தால் உங்களுக்கு கிடைப்பதோ புத்தம் அழகிய புதிய பெண்களுக்கான ஓர் குடை (லேடீஸ் குடை).




எனவே நீங்களும் அதிர்ஷ்டசாலியாக இன்றே கேட்டு வாங்குங்கள்

## லாலா சோப் அல்லது சன்சயின் சோப்




பாடசாலை மாணவ மாணவிகளுக்கான ஓர் பரிசுத்திட்டத்தை விரைவில் எதிர்பாருங்கள்....

NANTHU Graphics (N.G)

## லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.



உ
சிவமயம்



யாழ்ப்பாணம்
இந்து சமயப் பேரவைத் தலைவர்
சிவஞான வாகீசர்
தெய்வீகப் பெருந்தகை
அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள்
யாத்த

# கந்தபுராண வசன காவியம்
# வெளியீட்டு விழா

இடம்:- சத்திரம் ஞானவைரவர் தேவஸ்தான முன்றல
பெரியகடை, யாழ்ப்பாணம்.

காலம்:- 2000-10-28 சனிக்கிழமை பி.ப. 1.00 மணி

தலைவர்:- திருமிகு ஆ.மகாலிங்கம் அவர்கள்
(உப தலைவர், இந்துசமயப் பேரவை, யாழ்ப்பாணம்.)

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ※ மங்கள விளக்கேற்றல்: | திருமிகு கு.கங்கைவேணியன் அவர்கள் (தலைவர், ஞானவைரவர் தேவஸ்தானம்.) |
| | திருமிகு க.கணேசலிங்கம் அவர்கள் (பொருளாளர், ஞானவைரவர் தேவஸ்தானம்.) |
| ※ தமிழ் வேதம் ஓதல்: | செல்வன் க.கஜன் அவர்கள் (நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.) |
| ※ வரவேற்புரை: | திருமிகு ஐ.கோ.சந்திரசேகரம் அவர்கள் (மார்ஷல், யாழ்.பல்கலைக்கழகம்.) |
| ※ தலைமையுரை: | திருமிகு ஆ.மகாலிங்கம் அவர்கள் (உபதலைவர், இந்துசமயப் பேரவை.) |
| ※ ஆசியுரை: | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம்.) |
| | வேதசிவாகம கிரியா ஞானபாஸ்கரன் சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள அவர்கள் (அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.) |
| ※ வாழ்த்துரை: | உயர்திரு. மு.திருநாவுக்கரசு அவர்கள் (முன்னாள் நீதிபதி.) |
| | சைவத்திரு. சி.சக்திகிரீவன் அவர்கள் (கௌரவ செயலாளர், இந்துசமயப் பேரவை.) |
| ※ தொடக்கவுரையும் நூல்வெளியீடும்: | திருமிகு து.வைத்திலிங்கம் அவர்கள் (மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.செயலகம், யாழ்ப்பாணம்.) |
| ※ வெளியீட்டுரை: | பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் (தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.) |
| ※ ஆய்வுரை: | பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் (உயர்கல்விப் பட்டப்பின் படிப்புத்துறை பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்.) |
| ※ பாராட்டுரை: | பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்கள் (மெய்யியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.) |
| | அருள்நெறிச் செல்வர் திரு.வி.செல்வரத்தினம் அவர்கள் (சமாதான நீதிவான்) |
| ※ சிறப்புரை: | செஞ்சொற் செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்கள் (ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.) |
| | திருமிகு. வீ.கனகராசா அவர்கள் (ஆசிரியர்,நாகர்கோய்ல்அ.மி.த.க.பாடசாலை) |
| ※ கவிதாஞ்சலி: | மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் அவர்கள்(ஆசிரியர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம். செயலாளர்,கல்வ கலை இலக்கியபண்பாட்டுக்கழகம்) |
| ※ பதிலுரை: | நூலாசிரியா |
| ※ நன்றியுரை: | திருமிகு கா.நித்தியானந்தன் அவர்கள் (செயலாளர், ஞானவைரவர் தேவஸ்தானம்) |
| ※ தமிழ்வேதம் ஓதல் | |

குறிப்பு :-

☛ ஊர்வலம்:யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து இந்நூல் நூலாசிரியர், சைவ அன்பர்கள் சகிதமாக விழா மண்டபம் வரை பல விருதுகளுடன் கொண்டு வரப்படும்.

☛ இந்நூல் கந்தசஷ்டி முதலிய விரத காலங்களில் படித்துப் பயன்பெறக் கூடியதாகையால், சைவ ஆலய நிர்வாகிகளும், சைவ அபிமானிகளும் தவறாது சமுகந்தந்து ஒவ்வொரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

*வெளியீட்டுச் சபையினர்,*
*இந்து சமயப் பேரவை,*
*யாழ்ப்பாணம்.*

(C/13589)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆசிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பெறும் மாணவர் எண்ணிக்கை உயர வேண்டும்

## சென்னை மாநாட்டில் தீர்மானம்

சென்னை,ஒக்.27

தென்னாசியாவில் பல்கலைக்கழகங்களில் கற்பவர்களின் வீதத்தை 33சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று சென்னை சிறி இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரியில் கடந்தவாரம் நடைபெற்ற தென்மண்டல துணைவேந்தர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொண்டார்.

தற்பொழுது 7சதவீதமாக இருக்கும் பல்கலைக்கழகத்தில் கற்பவர்களின் எண்ணிக்கையை 33 சதவீதமாக உயர்த்தினால் தென்னாசியாவின் பொருளாதாரக் கூட்டமைப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும் என்றும் இம்மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக ஆளுநர் பாத்திமா பீபியினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த மாநாட்டில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் சங்கத் தலைவர் பேராசிரியர் வெங்கடாசலம், செயலாளர் பேராசிரியர் போவாட் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் பல்கலைக்கழக பரீட்சை முறைகள், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டன. (ஐ-5-ரி)

### சாவகச்சேரி நகரசபை ஊழியருக்கு

# சுயவிவரக் கோவைகள் புதிதாகத் தயாரிப்பு

சாவகச்சேரி,ஒக்.27

சாவகச்சேரி நகரசபையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான தனிநபர் சுயவிவரக் கோவைகள் தயாரிக்கும் பணியை அதன் நிர்வாகம் ஆரம்பித்துள்ளது.

சாவகச்சேரி நகரசபையிலுள்ள சுயவிவரக் கோவைகளை மீட்க முடியாத நிலை இருப்பதால் இப்பணி தொடங்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இத் தனிநபர் கோவைகள் தயாரிக்க வேண்டிய ஆவணங்களின் நிழற்பிரதிகளை தந்துதவுமாறு ஊழியர்களிடம் கோரப்பட்டுள்ளது.(ஐ-31)

# சாவகச்சேரி நகரின் சில பகுதிகளுக்கு செல்ல அனுமதி

தென்மராட்சி,ஒக்.27

சாவகச்சேரி நகரப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளைப் பார்வையிடவும் கைவிட்டு வந்த உடைமைகளை மீட்டுவரவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவில்குடியிருப்பு,சாவகச்சேரி நகரம்,சங்கத்தானை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுமதி கோரும் விண்ணப்பத்தினை அந்தந்தப்பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் வரணியில் உள்ள படை சிவில் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117-31)

# வாக்காளர் இடாப்பில் புதிதாக பெயர்களைச் சேர்க்க வசதி

## விண்ணப்பப் படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

2 ஆயிரம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு திருத்த வேலைகள் யாழ்.தேர்தல் திணைக்களத்தினால் அடுத்த வாரம் முதல் மேற்கொள்ளப்படவுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்டவர்களை வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளல் மற்றும் இறந்தவர்களை இடாப்பில் இருந்து நீக்குதல் போன்ற திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

இது தொடர்பான படிவங்களை பிரதேச செயலர் ஊடாக கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் வழங்கி விவரங்களை திரட்ட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பில் பதியத் தகுதியுடைய 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது பகுதி கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு தம்மை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-ரி)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### ச.விதுஷா

**27.10.2000 வெள்ளிக்கிழமை**

பண்ணாகம் தெற்கைச் சேர்ந்த சண்முகேந்திரன் - சுகுணராணி தம்பதிகளின் செல்வப்புதல்வி விதுஷா இன்று (27.10.2000) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். அன்பு விதுஷாவை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தி, பெரியமாமா, மாமி (ஜேர்மனி), சின்னமாமா (சுவிஸ்), பெரியப்பா, பெரியம்மா, கபிலன் அண்ணா, பிரணவன் மற்றும் இணுவில் பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் லண்டன் மதி மாமா, லண்டன் வாணி மாமி, சொரூபி அக்கா, ரஜனி அத்தை அனைவரும் விசுவத்தனை முருகன் அருள் பெற்று பல்லாண்டுகாலம் சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.
தகவல்: க.சண்முகேந்திரன்,
(79877)

## கந்த ஷஷ்டி நாளை ஆரம்பம்

கொழும்புத்துறை,ஒக்.27

இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றான கந்த ஷஷ்டி விரதம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

குடாநாட்டில் முருகன் ஆலயங்களிலும் ஏனைய கோவில்களிலும் நாளை முதல் அடுத்த ஆறு தினங்களுக்கு கந்த ஷஷ்டி விசேட வழிபாடுகளும் பூசைகளும் இடம்பெறவுள்ளன.

பெரும் எண்ணிக்கையான இந்துக்கள் இந்த ஆறுதினங்களும் விரதம் இருந்து ஆலயங்களில் இடம்பெறும் பூசைகளில் கலந்து கொள்வர்.

கந்த ஷஷ்டி முடிவில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை சூரசங்காரம் இடம்பெறும். (ஐ-30)

## தெற்கில் டெங்குக் காய்ச்சல் பரவுகிறது

கொழும்பு,ஒக்.27

மாத்தறைப் பகுதியில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளி ஒருவர் இறந்துள்ளார்.

கடந்த மாதம் தொடக்கம் மாத்தறை வைத்தியசாலையில் ஒரு டாக்டர் உட்பட நான்கு பேர் இந்த நோயினால் இறந்துள்ளனர்.

மாத்தறை போதனா வைத்தியசாலையிலும் மற்றும் தனியார் வைத்தியசாலையிலும் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 75 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-10)

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஒக்.27

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் கல்லூரியின் வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையாவும், கௌரவ விருந்தினராகக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ந.சிவபாலனும், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபையின் தலைவர் ந.திரிலோகநாதனும், சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.(இ-10)

## பொது மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்.ஒக்.27

அளவெட்டி கிழக்கு கும்பலை பொது மண்டப திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மா.தேவராசா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி திலகநாயகம் பத்தினியம்மாவும் சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறு [illegible] கம்.அ.ஸ்ரீகாந்தா ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-5)

# சந்தைக் குத்தகைக்காரர் வீட்டுக்கு முன்னால் சுட்டுக்கொலை

## கரவெட்டியில் புதன் இரவு சம்பவம்

நெல்லியடி,ஒக்.27

நெல்லியடி சந்தை குத்தகைக்காரர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு ஆயுதந்தாங்கிய நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

கரவெட்டி மத்தி, மாணிக்கவாசகர் வீதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தப்பு தவராசா (வயது 40) அவரது வீட்டுக்கு முன்னால் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் அன்றிரவு நெல்லியடி பொலீஸாரினால் எடுக்கப்பட்டு மந்திகை மருத்துவமனை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

பிரேதபரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை நடத்தினார். மரண விசாரணையை பருத்தித்துறை பதில் நீதிவான் பொ.குமாரசாமி மேற்கொண்டபின் கொலை எனத் தீர்ப்பளித்தார். சம்பவதினம் மாலை, காலஞ்சென்றவர் நெல்லியடிச் சந்தையிலிருந்து, வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை அவரது வீட்டு "கேற்"றடியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டதாக-இறந்தவரின் மகள் நெல்லியடி பொலீஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார்.

இச் சம்பவத்தின் போது வீட்டு மதிலும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.ஏ.திகம்பத் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

மரண விசாரணையில் கரவெட்டி மத்தி கிராமசேவை அலுவலர் ரீ.சுந்தரபாரதி சாட்சிகளை நெறிப்படுத்தினார். (இ-109-15-173-117-31)

## ஓவியர் மாற்குக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஒக்.27

திருமறைக் கலாமன்றம் அமரர் ஓவியர் மாற்கு நினைவாக ஏற்பாடு செய்துள்ள அஞ்சலி நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-7)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| நேற்றுவரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 117,801 |
| 1. ஓர் அன்பர் - கோப்பாய் | - 100 |
| 2. ஒரு தமிழன் - கஸ்தூரியார் வீதி | - 200 |
| 3. விஞ்ஞானபீட மாணவர்கள் - காட்டு பங்களா | - 500 |
| 4. அஜந்தாஸ் புடைவை மாளிகை - யாழ்ப்பாணம் | - 1,000 |
| 5. செல்வி ஜெயமதி தம்பித்துரை - உரும்பிராய் தெற்கு | - 500 |
| 6. தம்பித்துரை லிங்கேஸ்வரர் - உரும்பிராய் தெற்கு | - 200 |
| 7. ஓர் அன்பர் - ஏழாலை | - 500 |
| 8. ஓர் அன்புத் தங்கை - சிறுப்பிட்டி | - 500 |
| 9. பாப்பையா கடை - நாவலர் வீதி யாழ்ப்பாணம் | - 2,000 |
| 10. செ.அரசரத்தினம் - வேலணை (மேற்கு) | - 150 |
| 11. த.சுந்தரலிங்கம் - உரும்பிராய் | - 500 |
| 12. ஓர் அன்பர் - யாழ்ப்பாணம் | - 200 |
| | 124,151 |


## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் 2000

காலம் :- 29.10.2000 ஞாயிறு மு.ப.9.00 a.m
இடம் :- ஒரேற்றர் கலையரங்கம்.
தலைவர் :- திருமிகு க.சிவாஜி (அதிபர்)
பிரதம விருந்தினர் :- பேராசிரியர் இ.குமாரவடிவேல்
B.Sc.(HONS), Ph.D.(BRISTOL)

ஆசியுரை:
அன்னை கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
நிறுவுநர் நினைவுப் பேருரை : திருமிகு வே.கருணாநிதி
B.A.(ENGLISH) P.G.Dip. IN ENGLISH
(ஆங்கிலத்துறைத் தலைவர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்)
பரிசில் வழங்கல் :- திருவாட்டி ராஜினி குமாரவடிவேல்
நிறைவுரை :- செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

விழாவிற்கு சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

கந்தரோடை,
சுன்னாகம். (79926)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவளை தமிழ்க் கைதிகள் படுகொலைக்கு

# அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.27

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் பலர் கடந்த செவ்வாயன்று கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் மாணவர் அமைப்புகள் கண்டன அறிக்கைகளை விடுத்துள்ளன.

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சிங்களப் பேரினவாதத்தின் காடைத்தனத்தை மீண்டும் ஒருமுறை உலகுக்கு வெளிக்காட்டி நிற்கிறது.

மேற்படி சம்பவம் இந்த நாட்டில் சிறுபான்மைத் தமிழினத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குரியதாக்கி விட்டது. சமாதானத்துக்கான போர் என உலகை ஏமாற்றி ஒட்டுமொத்தமான தமிழின அழிப்பில் சிங்களப் பேரினவாதம் ஈடுபட்டு நிற்கின்றமையை உலகின் கண்கள் பாராமுகமாக இருப்பது தமிழினத்தின் சாபக்கேடே.

தமிழர்களின் போராடும் வலுவே சிங்களப் பேரினவாதத்தின் கோரப் பிடியில் இருந்து விடுவிக்கும் என்ற யதார்த்தத்துக்கு அமைய தமிழினம் தனது பாதையை இனியும் அகிம்சை வழியில் செலுத்துவது தமிழினத்தின் ஒட்டுமொத்தமான அழிவுக்கே வழிவகுக்கும்.

வெலிக்கடை, மகஸீன் மற்றும் களுத்துறை, பண்டாரவளை போன்ற இடங்களில் நடைபெற்ற படுகொலைகளுக்காக இலங்கை அரசையும், அரச அதிகாரிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபையிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

### ஈ.பி.டி.பி.

தமிழ்பேசும் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழியில் தீர்வுகாண முனைப்புக்கள் சகல வழிகளிலும் மேற்கொள்ளப்படும் சமயத்தில் பண்டாரவளைப் படுகொலை இடம்பெற்றுள்ளமை துரதிர்ஷ்டவசமானதே.

அமைதியையும்,சமாதானத்தையும் நிலைநாட்டி தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் விமோசனம் கிடைக்க வழிசெய்யும் சக்திகளுக்கு தேசிய அரசியலில் கிட்டிவருகின்ற அந்தஸ்துக்களைச் சகித்துக்கொள்ள முடியாத பேரினவாதிகளின் வெறித்தனமான தூண்டுதல்கள் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருக்கின்றன.

### புதிய ஜனநாயகக் கட்சி

பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் படுகொலைச் சம்பவத்தை எத்தகைய கும்பல் செய்திருப்பினும் அதற்கான முழுப்பொறுப்பையும் பேரினவாதப் பேச்சுக்களை ஆவேசமாகப் பேசிவரும் தலைவர்களே ஏற்கவேண்டும்.

இந்தப் படுகொலையைச் செய்தவர்கள் தன்னிச்சையாகச் செயற்பட்டிருக்க முடியாது. இவர்களுக்குப் பின்னால் திட்டமிடப்பட்ட பேரினவாதக் கரங்கள் செயற்பட்டிருப்பதாகவே கருதமுடிகிறது.

### நீதி சமாதான ஆணைக்குழு

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை மிக நீண்ட காலமாகத் தடுப்பு நிலையங்களில் தடுத்து வைத்திருக்க வேண்டாம் என்றும், தமிழ்க்கைதிகளை தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யும்படியும் எமது அமைப்பு உட்பட பல அமைப்புக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துவந்தன. ஆனால் அவை யாவும் அலட்சியப் படுத்தப்பட்டு விட்டன.அதற்கு பண்டாரவளைச் சம்பவம் ஓர் எடுத்துக்காட்டு.

இன உணர்ச்சிகளைத் தூண்டி விடக்கூடிய போர்ச் சூளுரைகளும் போரின் பாதிப்புக்களும் அதிகரித்துள்ள இந்தச் சூழ்நிலையில் மேற்படி படுகொலை தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். இல்லையேல் 1970களிலும் 1980களிலும் நடத்தப்பட்ட தமிழர்களுக்கு எதிரான கலவரங்கள் மீண்டும் தோன்றுவதற்கு வழிவகுக்கப்பட்டுவிடும்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி

'பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள், யுவதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்' என நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்து இரண்டு தினங்களுக்குள் பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் படுகொலைச் சம்பவம் இந்த நாட்டில் நீதிக்கும் - உயிர்வாழும் அடிப்படை உரிமைக்கும் இடமிருக்கிறதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த தர்ம போதனைகளைத் தெளிவாக அறிந்தவர்கள் ஒருபோதும் இவ்வாறான செயல்களைச் செய்ய முன்வரமாட்டார்கள். இனவாதத்தைத் தூண்டிவிடும் பௌத்த மகாசங்கங்களும், தலைவர்களும் இந்தப் படுகொலைக்கு என்ன நியாயம் கற்பிக்கப் போகின்றார்கள்.

### புளொட்

இலங்கையில் காலத்துக்குக் காலம் சிறைச்சாலைகளில்,தடுப்பு முகாம்களில் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்படுவது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக காலத்துக்குக் காலம் பல்வேறு விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் அவற்றினால் எவ்வித பயனும் ஏற்படவில்லை. எனவே இவ்வாறான இன அழிப்புக்கள் தொடர்ந்தும் நடக்காது தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### தமிழ்க் காங்கிரஸ்

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகளை மேற்கொள்ள சுயாதீனமான விசாரணைக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குதல் வேண்டும். மனித உரிமை ஆணைக்குழு மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை என்பன இவ்விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

---

## கொலையுண்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளதாகவும் சடலங்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

அடையாளம் காணப்படாத சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என்றும் கூறப்பட்டது.

கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்களின் பிரேத பரிசோதனை நேற்று பதுளை வைத்தியசாலையில் இடம்பெற்றது. மரணவிசாரணைகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கொழும்புக்கு

அடையாளம் காணப்பட்ட 13 சடலங்களும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக கொழும்புத் தகவல் ஒன்று நேற்று இரவு தெரிவித்தது. எனினும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இந்த முகாமில் 48பேர் வரை இருந்தனர் என்றும் சம்பவ நேரம் வெளியே சென்றிருந்த இருவர் மட்டும் காயம் எதுவுமின்றி தப்பியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அடையாளம் காணப்பட்ட சடலங்களில் நான்கு திருகோணமலையைச் சேர்ந்தவர்கள் உடையன. நேற்று திருகோணமலையில் கடைகளிலும் வீடுகளிலும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இதற்கிடையில், கைதிகள் படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நியமிக்கப்பட்ட இரு குழுக்கள் நேற்று பண்டாரவளை சென்றன.

(அ-இ-ரி-5-8-7)

### ரெலோ

பண்டாரவளைச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படுதல் வேண்டும். இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள அவர்களின் உறவினர்களுக்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

அதேவேளை படுகொலைச் சம்பவத்துடன் தொடர்பானவர்கள் இனங்காணப்படுதல் வேண்டும்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி)

அரசாங்கத்தை நம்பிச் சரணடைந்தவர்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமையாகும். பாதுகாப்பு அரண்களுக்குள் உள்ளவர்களுக்கே அரசாங்கம் பாதுகாப்பு வழங்கவில்லை என்றால் நாட்டு மக்களின் பாதுகாப்பை எப்படி அரசாங்கம் உத்தரவாதம் செய்யப்போகின்றது என்பதே இப்போது மக்கள் முன்னால் உள்ள கேள்வியாகும்.

இத்தகைய சம்பவங்களுக்கு உடனடியாக அரசு முடிவுகாணாவிட்டால் இனவாதங்கள் கட்டுப்பாடற்று தலைவிரித்து ஆடுவதும், காட்டுமிராண்டித்தனமான இனப்படுகொலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே பண்டாரவளைப் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு விசேட நஷ்டஈடு வழங்குவதோடு காயமடைந்தவர்கள் குணமடைய தீவிர வைத்திய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(இ-7)

---

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை அடுத்து இவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்கள் எந்த விசாரணையும் இன்றி விடுவிக்கப்பட்டமையை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளார். (இ-8)

---

## அடையாளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ சின்னத்துரை மோகன் (ஆனந்தபுரம், திருகோணமலை)

★ கணபதிப்பிள்ளை ரவிதரன் (லிங்கபுரம், மணலாறு)

★ விஸ்வலிங்கம் விஜேந்திரன் (நாவல்காடு, மட்டக்களப்பு)

★ மாரிமுத்து பாலகுமார் (புல்லாவெளி, மட்டக்களப்பு)

★ புண்ணியமூர்த்தி மதியழகன் (மூதூர், திருகோணமலை)

★ செல்வராஜா துரைராஜா (தம்பளை, கரவெட்டி மேற்கு)

★ திருச்சந்திரபாலன் முகுந்தன் (கரவெட்டி கிழக்கு, யாழ்ப்பாணம்)

★ சிவயோகராஜன் விபுலானந்தராஜா (திருக்கோயில், அம்பாறை).

(இ-8)

## இந்துசமய அலுவல்களுக்கு தனி அமைச்சு

கொழும்பு,ஒக்.27

இந்துசமய கலாசார அலுவல்களுக்கென தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ அலுவல்களுக்கான அமைச்சராக நியமனம் செய்யப்பட்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்த அமைச்சையும் பொறுப்பேற்பார் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தலும் நேற்றையதினம் வெளியாகியது.

இந்துசமய கலாசார அலுவல்களுக்கென தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென சர்வதேச இந்துமத குருபீடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பேச்சு நடத்தி வந்தமை தெரிந்ததே.

(இ-7-8)

## ஹர்த்தால்

மட்டக்களப்பு,ஒக்.27

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து இன்று மட்டக்களப்பில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

'சுதந்திர மாணவர் முன்னணி' என்ற அமைப்பு இதற்கான அழைப்பை விடுத்துள்ளது. (இ-21)

## ஹெலியின் சுடுகலன் இயக்குநர் சடலம் மீட்பு

திருகோணமலை,ஒக்.27

கடந்த திங்களன்று விடுதலைப் புலிகளின் சூட்டுக்கு இலக்காகி திருகோணமலை உப்பாறு உப்புக் கடலில் வீழ்ந்து நொறுங்கிய ஹெலியின் சுடுகலன் இயக்குநரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

கப்டன் சஞ்சித் யாப்பா விக்கிரமசிங்க என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவத்தில் உயிரிழந்த விங்கொமாண்டரின் சடலமும்,உதவி விமானியின் சடலமும் கடந்த செவ்வாயன்று சுழியோடிகளால் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

இதற்கிடையில் - மேற்படி ஹெலியின் சகல பாகங்களும் மிகவும் சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டன. (இ-7-145)

## ஆர்ப்பாட்டத்தில் கூட்டணியும் கலந்து கொள்ளும்

யாழ்ப்பாணம்,ஒக்.27

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து யாழ். நகரில் நடைபெறவிருக்கும் அமைதி ஆர்ப்பாட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கலந்துகொள்ளும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடிப்படை மனித உரிமை மீறல்களை சுதந்திரமடைந்த காலத்திலிருந்தே எதிர்த்து வந்த கூட்டணி தொடர்ந்தும் மனித உரிமை மீறல் சம்பவங்களை கண்டிக்கும் என்று இது தொடர்பாக கூட்டணி வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணியின் ஆதரவாளர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-5)


### திருட்டுப் பற்றிய அறிவித்தல்

எனக்குச் சொந்தமான **EBK 2000** மொடல் **SRIRAM HONDA GENERATOR EN. NO. 8166966** இலக்கமுள்ள மின் பிறப்பாக்கி திங்கட்கிழமை **(23.10.2000)** இரவு எனது வீட்டிலிருந்து திருடப்பட்டுள்ளது.

இதுபற்றி யாராவது தகவல் தெரிந்தால் அல்லது வாங்கி வைத்திருந்தால் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கோ அல்லது எனக்கோ அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

M.அருளப்பு

ஏழாலை மத்தி,

ஏழாலை.

(79865)



....ஆரம்பிக்க மாட்டீர்களா?

எதனை ?

நாளை இதே இடத்தில்....

(79898)



D.M.I

(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

இணைந்த கணிதம்

By.T.THAVASEKAR. B.Sc.

A/L - 2001

திங். செவ். 6.45 - 7.45 கணிதத் தொகுத்தறிமுறை

புதன் - 4.30 - 6.30 ஒருதளவிசைகள்

ஆரம்பம்:- இன்று 27.10.2k மாலை 6.45 (S.L.T)

(C/13575)



### ஈ.பி.டி.பியின் வேண்டுகோள்

பண்டாரவளை விந்துனுவெவ படுகொலையைக் கண்டித்து குடாநாடு தழுவிய ரீதியில் "துக்க அனுஷ்டிப்பு" நடைபெறவுள்ளது. யாழ்.குடாநாட்டில் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள், பொதுஸ்தாபனங்கள்,அரச,தனியார் நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்களும் தங்கள் ஸ்தாபனங்களையும் நிறுவனங்களையும் மூடியும் மற்றும் போக்குவரத்து சங்கங்கள் தங்கள் போக்குவரத்து சேவையினை இடைநிறுத்தியும் நாளை சனிக்கிழமை நடைபெற உள்ள "துக்க அனுஷ்டிப்பு"க்கு பூரண ஆதரவு வழங்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

யாழ்.மாவட்டம்

27.10.2000.

(C/13594)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org